Deposition of witness
( Under Section 58 of Indian Evidence Act )
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 67/2023

## Deposition of PW. 1

| | | |
|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | துலுக்கவிடுதி |
| Religion | : | இந்து |
| Age | : | **46/2023** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 03.11.2023**
(1,6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 2,3,4,5,7,8 எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3,4,5,7,8 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 இன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

***முதல் விசாரணை***

நான் துலுக்கவிடுதி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் மணிகண்டன், பாண்டியன் ஆகிய இருவரையும் எனக்கு தெரியும். சம்பவத்திற்கு முன்பு பழனிவேல் தரப்பினருக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் இடையே இடப் பிரச்சனைகள் காரணமாக முன்விரோதம் இருந்து வந்தது. நான் இரு தரப்பினருக்கும் இடையேயான பிரச்சனையை முடிப்பதற்கு பேச்சு வார்த்தை நடத்தினேன். **22.09.2022** அன்று காலை சுமார் **11.00** மணிக்கு இரண்டு தரப்பினரையும் பத்திரபதிவு செய்வதற்காக கீரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றிருந்தேன். முதலில் பழனிவேல் தரப்பினருக்கு பத்திரபதிவு முடிந்துவிட்டது. எதிகள் தரப்பினருக்கு பத்திரபதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. அப்போது மதியம் சுமார் **3.15** மணியளவில் மணிகண்டனின் அம்மா அவரது வீட்டில் வைத்து பழனிவேல் தரப்பினரை பற்றி பேசிகொண்டிருந்துள்ளார். அந்த தகவல் பழனிவேல் தரப்பினற்கு போன் மூலம் கிடைத்ததும் பழனிவேல் நாங்கள்தான் பத்திரபதிவு செய்ய வந்துவிட்டோம். பின்னர் எதற்காக மணிகண்டனின் அம்மா எங்களை பேசுகிறார் என கேட்கவும் இருதரப்பினருக்கும் தள்ளுமுள்ளு ஆகிவிட்டது. நான் அவர்களை விலக்க சென்றபோது எதிரிகள் மணிகண்டனும் பாண்டியனும் என்னை பார்த்து இடப்பிரச்சனைக்கு இவன்தான் காரணம். இவன் பழனிவேல் தரப்பினருக்கு சாதகமாக பேசுகிறான் என்று சொன்னார்கள். அப்போது எதிரி மணிகண்டன் என்னை தேவுடியாபய என்று திட்டி என்னை

அடிக்க வந்தார். நான் அதனை தடுக்கவும் எதிரி மணிகண்டன் கையில் வைத்திருந்த பிளேடு போன்ற ஆயுதத்தால் எனது இடது முன் கையில் தாக்கினார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. நான் எதிரிகளிடம் நான் பிரச்சனையை முடிப்பதற்குதான் வந்தேன். எதற்காக இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி பாண்டியன் எனது வலது கை நடுவிரலில் கடித்துவிட்டார். சம்பவத்தில் எனது சட்டைபையில் இருந்த செல்போன் கீழே விழுந்துவிட்டது. அதனை எடுப்பதற்கு கீழே குனிந்தபோது எதிரி மணிகண்டன் கையில் வைத்திருந்த ஏதோ ஒரு பொருளால் எனது வலதுப்பக்க தலையில் அடித்துவிட்டார். அதனால் நான் நிலைதடுமாறிவிட்டேன். அப்போது எதிரி மணிகண்டன் எப்போது இருந்தாலும் உன்னை சும்மா விடமாட்டேன் என மிரட்டினார். அங்கிருந்த கோவிந்தராஜ் என்னை அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச்சென்றார். அங்கு எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். அங்கிருந்து பேராவூரணி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்றேன். பேராவூரணி அரசு மருத்துவமனையில் நான் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரிகள் தரப்பில் கு.வி</u>.

போலிசார் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் **23.09.2022** அன்று பேராவூரணி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரித்த போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை சொல்லியுள்ளேன். எதிரிகள் இருவரும் எனது உறவினர்களா என்றால் எதிரிகள் எனது சித்தப்பாவின் மகன்கள். முதலில் பழனிவேல் தரப்பினருக்கு பத்திரபதிவு முடிந்ததும் அலுவலகத்திற்கு வெளியில் வைத்து எதிரி மணிகண்டன் தரப்பில் பத்திரத்தில் பழனிவேல் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டார். ஆனால் பத்திரம் பதிவிற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே செல்லவில்லை என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லும்போது நாங்கள் அனைவரும் ஒன்றாக சென்றோம் என்றால் சரியல்ல. தனித்தனியாகத்தான் சென்றோம். நடந்ததாக கூறப்படும் சம்பவம் யாருடைய அலுவலகத்திற்கு எதிரே நடந்தது என்றால் பத்திரபதிவு அலுவலகத்திற்கு எதிரே நடந்தது. இருதரப்பினருக்கும் பத்திரம் எழுதிய எழுத்தர் யார் என்றால் விஜயன் என்பவர் எழுதினார். தற்போது சாட்சி தானாக முன்வந்து பழனிவேல் தரப்பினருக்கு விஜயன் பத்திரம் எழுதினார். எதிரிகள் தரப்பினருக்கு பத்திரம் எழுதியவரை தெரியும் அவரது பெயர் தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் ஆட்கள் எத்தனை பேர்

இருந்தார்கள் என்றால் சுமார் 10,15 பேர் இருந்தார்கள். நான் அளித்த புகார் வாக்குமூலத்தில் எதிரி மணிகண்டன் பிளேடு போன்ற ஆயுதத்தால் என்னை தாக்கினார் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி மணிகண்டன் வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். சம்பவத்தன்று எதிரிகள் தரப்பு பத்திர பதிவு முடிந்ததா என்றால் முடிந்துவிட்டது. சம்பவத்திற்கு பின்னர்தான் எதிரிகள் தரப்பு பத்திரம் முடிக்கப்பட்டது. அந்த சமயத்தில் இருதரப்பும் சமாதானமாக சென்றுதான் பத்திரபதிவு செய்யப்பட்டது என்றால் என்னை கோவிந்தராஜ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார். பின்புதான் பத்திர பதிவு செய்யப்பட்டது. எதிரி மணிகண்டன் எனது தலையில் எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்றால் எந்த ஆயுதம் என்பது தெரியவில்லை ஆனால் அவர் தாக்கியபோது அடி வலுவாக இருந்தது. எதிரி மணிகண்டன் என்னை தலையில் வலுவாக அடித்ததால் ரத்தகாயம் ஏற்பட்டதா என்றால் இல்லை வீக்கம் ஏற்பட்டது. கீரமங்கலம் ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து நேராக இரவு சுமார் 7.00 மணிக்கு காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு ஆரம்ப சுகாதார மையத்திற்கு சென்றோம் என்றால் மாலை 5.00 மணி போல சென்றோம். சம்பவம் நடந்த பின்னர் எவ்வளவு நேரம் கழித்து மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து சென்றிருப்போம். அதற்கு முன்பு கோவிந்தராஜ் என்னை பேருந்து நிலையத்திற்கு செல்லும் வழியில் உள்ள கடைக்கு அழைத்து சென்று தண்ணீர் வாங்கி கொடுத்தார். காவல் நிலையம் சென்றபோது அங்கிருந்த போலிசார் என்னை விசாரித்தனரா என்றால் விசாரித்தார்கள். விசாரணைக்கு பின்னர் எழுதிக்கொண்டார்கள். முழுமையான விசாரணை நடக்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்து போலிசாரிடம் எத்தனை மணிக்கு எங்கு வைத்து யார் அடித்தார்கள் என்ற விவரத்தை சொன்னேன். அதனை ஒரு வெள்ளைத்தாளில் எழுதிக்கொண்டார்கள். நான் பட்டபடிப்பு படித்துள்ளேன். ஆனால் அதனை நிறைவு செய்யவில்லை. போலிசார் காவல்நிலையத்தில் எழுதிகொண்டதை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் நான் கையொப்பம் செய்துகொடுத்தேனா என்றால் செய்துகொடுத்தேன். கீரமங்கலம் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்த பின்னர் வேறு எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் பேராவூரணி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை நாள் நான் பேராவூரணி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் 24.09.2022 வரை இருந்தேன். அங்கு சிகிச்சைஅளித்த மருத்துவர் என்னிடம் எப்போது யாரால் எங்கு வைத்து காயம் ஏற்பட்டது என்று கேட்டார் என்றால் சரிதான். நான் பழனிவேல் தரப்பினரோடு கூட்டு சேர்ந்துகொண்டு எதிரி மணிகண்டன் வழக்கறிஞராக பணி செய்வதால் பழிவாங்கும் நோக்கத்தோடு எதிரிகள் மீது பொய்யாக புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை என்றாலும் தாக்கவில்லை என்றாலும் சரியல்ல.

எனக்கு வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகாரினை அளித்தேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் போலிசார் என்ன எழுதினார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்னவைதான் போலிசார் எழுதி கொண்டார்கள். நான் புகார் கொடுத்தது **22.09.2022** அன்று கொடுத்தேன். விசாரணைக்கு பின்னர் **26.09.2022** அன்று வழக்கு பதிவு செய்தார்கள்.

**மறு விசாரணை : இல்லை**